

கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில், பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் தி.மதியழகன் மாவட்ட ஊராட்சி குழு முன்னாள் துணைத் தலைவர் முத்தமிழ்செல்வி ஆகியோரது புதல்வி வழக்கறிஞர் ரேவதி பெரம்பலூர் மாவட்டம், அ.தங்கவேல் வள்ளி இவர்களின் புதல்வன் விஜய் பிரசாத்( தூத்துக்குடி சிறைத்துறை நன்னடத்தை அலுவலர்) ஆகியோரது திருமணத்தை நடத்தி வைத்து சிறப்புரையாற்றினார். இதில் கே.என். அருண் நேரு எம்.பி., கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் சுபா.சந்திரசேகர், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பிரபாகரன், கா.சொ.க.கண்ணன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மற்றும் மாவட்ட, ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்,கழக பிரதிநிதிகள் உள்ளனர்.

### சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# தாரமங்கலத்தில் - பேரறிஞர் அண்ணா நினைவு நாள் - அமைதிப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிக்கை!



தாரமங்கலம், பிப். 1-

காஞ்சி தந்த காவியத்தலைவர் தமிழ்மொழி உயர்விற்காகவும், தமிழர்களின் மேம்பாட்டிற்காகவும், தமிழ்நாட்டின் சிறப்பிற்காகவும், வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் தலைவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர், தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளான 03.02.2025 திங்கட்கிழமை அன்று காலை 8.30 மணியளவில் தாரமங்கலம் நகர தி.மு.க அலுவலகத்தில் இருந்து அமைதிப் பேரணி தொடங்கி பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அது சமயம் சேலம் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக்கழக செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் இன்னாள்முன்னாள் பிரதிநிதிகள், கழக முன்னோடி கள், கழக செயல்வீரர்கள் அனைவரும் திரளாக கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு டி.எம்.செல்வகணபதி எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.

# கோ-ஆப் டெக்ஸ் ஊழியர்களுக்கு 15 சதவிகித ஊதிய உயர்வு!

## தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை, பிப்.1-

கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்களுக்கு 15 சதவிகிதம் வரை ஊதிய உயர்வு அறிவித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் கைத்தறி, துணிநூல் துறை கட்டுப்பாட்டில் இயங்கும் கோ-ஆப்டெக்ஸ் இந்திய அளவில் முன்னணி கைத்தறி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மற்றும் வெளிமாநிலங்களில் 150 கிளைகளுடன் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்களுக்கு 15 சதவீத ஊதிய உயர்வு அளித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்களுக்கு 15 சதவிகிதம் வரை ஊதிய உயர்வு அறிவிக்கப்படுவதாகவும், கோ-ஆப்டெக்ஸில் அலுவலக உதவியாளர் முதல் தலைமை பொது மேலாளர் வரை 10 நிலைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கோஆப்டெக்ஸ் ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப் படி மற்றும் நகர ஈட்டுப்படியை உயர்த்தியும் தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பில் வீரவணக்க நாள் கூட்டம்!

## தே.மதியழகன் எம்.எல்.ஏ. – ஈரோடு. இறைவன் – ஒப்பிலாமணி – அருள்தாஸ் சிறப்புரை!

கிருஷ்ணகிரி, பிப். 1-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணியின் சார்பில் கிருஷ்ணகிரி ரவுண்டானா அருகில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஜெயேந்திரன் தலைமை தாங்கினார் கூட்டத்தில் கிருஷ்ணகிரி மாவட்ட துணை அமைப்பாளர் ராமச்சந்திரன் வரவேற்புரை ஆற்றினார் . கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் நவாப் , ஒன்றிய கழக செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன் தேங்காய் சி. சுப்பிரமணி, மகேந்திரன் , சாந்தமூர்த்தி, ராஜேந்திரன், அறிஞர், நரசிம்மன், குண.வசந்தரசு,எக்கூர். செல்வம், குமரேசன், ரஜினி செல்வம்,

பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை, வெங்கடப்பன் , பேரூர் கழக பொறுப்பாளர்கள் பார்த்திபன், சாஜித், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் கௌதம் , ஹரிஹரன், உமா சத்திய ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் ,மாநில இலக்கிய அணி இணை செயலாளர் ஈரோடு. இறைவன், தலைமை கழக பேச்சாளர்கள் ஆலந்தூர்.ஒப்பிலாமணி, மயிலாடுதுறை அருள்தாஸ் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

கூட்டத்தில் மொழிப் போர் தியாகிகள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.சி. கோவிந்தசாமி, ஏ. தனபால் ஆகியோரை பாராட்டி சால்வை அணிவித்து அவர்களை கௌரவிக்கப்பட்டனர் இக்கூட்டத்தில் மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் செங்குட்டுவன், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணை செயலாளர் வெங்கடேசன்,

மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன், மாவட்ட பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செந்தில், கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம், பாலன் , நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன், கழக பிரமுகர்கள் அன்பரசன் ,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தினேஷ் ராஜன், லட்சுமி பிரியா, புஷ்பா விஜய் ராஜசேகர், இளையராஜா, காந்தி, பாலாஜி, ஜெயக்குமார், வேல்மணி, மோகன், அம்மன் ராஜா, சுரேஷ்குமார், மாணிக்கம், வெங்கடேஷ் ராஜா மற்றும் கூட்டத்தில் இந்நாள், முன்னாள் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்

இக்கூட்டத்தில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் மணிபாரதி நன்றியுரை ஆற்றினார்.



கழக துணைப் பொதுச் செயலாளர், கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்ட மகளிர் தொண்டரணி அணி அமைப்பாளர் அ.ஆனந்தி ஏற்பாட்டில் திருப்பூர் விஜயாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு பேனா மற்றும் இனிப்புகளை திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க. செல்வராஜ் வழங்கினார். இதில் மாநகர செயலாளர்கள் டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், கழக மகளிர் தொண்டரணி துணை செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் மாலதி நாகராஜ், கழக மகளிர் அணி பிரசாரக்குழு செயலாளர் உமாமகேஸ்வரி, மாவட்ட துணை செயலாளர் வழக்கறிஞர் சி.கே.நந்தினி, பகுதி கழக செயலாளர் மேங்கோ அ.பழனிச்சாமி, தெற்கு மாநகர விவசாயி அமைப்பாளர், மாவட்ட பிரதிநிதி வி.பி.மகேந்திரன், வட்டக் கழக செயலாளர்கள் வெங்கட்ராஜ், மு.மனோகரன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ம.சூர்யா, பள்ளி மேலாண்மை குழுத்தலைவர் சுரேஷ்பாபு, மாமன்ற உறுப்பினர்கள் ஜெயசுதா பூபதி, வெ.ராதாகிருஷ்ணன், தலைமைக் கழக பேச்சாளர் மனோகர் பாபு உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுகூட்டம் நடைபெற்றது கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஓய். பிரகாஷ் அந்தியூர்.பா. செல்வராஜ், பிரம்மபுரம் பழனி ஆகியோர் சிறப்புரை ஆற்றினார் கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், ஓசூர் மாநகர மேயர் சத்யா , மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ், மாவட்ட பொருளாளர் சுகுமாறன்,துணை மேயர் ஆனந்தய்யா, மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், மாணவரணி அமைப்பாளர் கண்ணன், மாணவரணி துணை. அமைப்பாளர்கள் செல்வம், யஷ்யஷ்வினிமோகன், வருண்குமார், நிசார் அகமது, ராகவேந்திரன் , ரத்தன்சிங் உள்ளிட்ட ஏராளமானோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

### சேலம் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில்

# பேரறிஞர் அண்ணா நினைவு நாள் பேரணி!

## மாவட்டச் செயலாளர் ஆர்.சிவலிங்கம் வேண்டுகோள்!



சேலம், பிப். 1-

சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

அறிவுலக மாமேதை திராவிட இயக்க ஆசான் தி.மு.கழக நிறுவனர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாள் பிப்ரவரி 3ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது. சமூக நீதி, மாநில உரிமை, மொழி உரிமை தொடர்பான சிந்தனையாளர், அந்தச் சிந்தனையை வெற்றிகரமாக அரசியல் படுத்தியவர். அப்படி அரசியல் படுத்துவதற்காக மேடை, பத்திரிகை, நாடகம், சினிமா, நூல்கள் என்று எல்லா ஊடகங்களையும், கையில் எடுத்து அதற்குப் புதிய தோற்றமும், உள்ளடக்கமும் தந்தவர் கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு எனும் தாரகமந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் - ‘இப்படை தோற்கின் எப்படை வெல்லும்’ என்ற தம்பிமார் பெரும்படையைக் கண்டு நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் பேரறிஞர் அண்ணா அவர்கள் வழி நின்று அண்ணாவின் கொள்கைக் கோட்பாடுகளை துளியும் பிசகின்றிக் காத்து அவர் உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகப் பேரியக்கத்தை கோடிக் கணக்கான தொண்டர்களையும் பற்றாளர்களையும் கொண்டு தலைவர் கலைஞர் அவர்கள் வழிநடத்தி வந்தார்கள். முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வழிநின்று செயல்படும் கழகத் தலைவரும் தமிழ் நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரைப்படி பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாளை ஒவ்வொரு கழகத் தொண்டனும் நினைவு போற்ற வேண்டும்.

அதன்படி சேலம் கிழக்கு மாவட்டத்தில் 03.02.2025 திங்கள் கிழமை அன்று கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் (எனது) தலைமையில் வாழப்பாடி பேருந்துநிலையத்திலிருந்து இருந்து பேரணியாகச் சென்று மாவட்டக் கழக அலுவலகத்தில் தளபதி மு.க. ஸ்டாலின் அறிவாலயத்தில் காலை 9 மணியளவில் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

எனவே மாவட்ட கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற , சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுக்குழு , செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், செயலாளர்கள் , நகர மன்ற தலைவர்கள், கவுன்சிலர்கள் , கிளைக் கழக செயலாளர்கள், வார்டு செயலாளர்கள் ,சார்பு அணிகளின் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் பெரும் திரளாக பங்கு பெற வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### தி.மு.க. சுற்றுச்சூழல் அணி சார்பில் துணை முதலமைச்சர் பிறந்த நாள் விழா!

# பேராவூரணியில் மாட்டு வண்டி - குதிரைவண்டி எல்கை பந்தயம்!

## அமைச்சர்கள் கோவி.செழியன் – சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தனர்!

தஞ்சாவூர், பிப்.1-

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணியில் திமுக சுற்றுச்சூழல் அணி சார்பில் பொங்கல் விழா மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாட்டு வண்டி, குதிரைவண்டி எல்கை பந்தயங்களை அமைச்சர்கள் கோவி. செழியன், சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் தஞ்சை எம்பி, எம்.எல்.ஏ.க்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்....

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணியில் திமுக சுற்றுச்சூழல் அணி சார்பில் 23 ஆம் ஆண்டு திராவிடர் திருநாளாம் பொங்கல் விழா மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாட்டு வண்டி, குதிரை வண்டி, எல்கை பந்தயப் போட்டி திமுக மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் கார்த்திகேயன், வேலுச்சாமி ஏற்பாட்டில் நடைபெற்றது.

மாட்டு வண்டி, குதிரை வண்டி எல்கை பந்தயப் போட்டியை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை அமைச்சர் சிவ.வி. மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்

இவ்விழாவில் மாவட்டச் செயலாளர்கள் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தலைமை செயற்குழு உறுப்பினர் ந. அசோக்குமார் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தனர்.

போட்டியில் பெரிய மாடு, கரிச்சான்மாடு, பூஞ்சிட்டு மாடு மற்றும் நடுக் குதிரை, புதுபூட்டு குதிரை என மொத்தம் 60 ஜோடி மாட்டு வண்டிகளும் 20 குதிரை வண்டிகளும் போட்டியில் கலந்து கொண்டு எல்கையை நோக்கி சீறிப்பாய்ந்தது. 8 மைல், 6 மைல், 5 மைல் என தூரம் நிர்ணயிக்கப்பட்டு வெற்றிபெறும் மாடு மற்றும் குதிரைகளுக்கு 4 லட்சம் ரூபாய் ரொக்க பரிசு தொகையும், கோப்பையும், நினைவு பரிசுகளும் வழங்கப்பட்டது. விறுவிறுப்பாக நடைபெற்ற மாட்டுவண்டி, குதிரை வண்டி எல்கை பந்தயத்தில் திமுக மாநில மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நகர பேரூர் கிளை கழக செயலாளர்கள் மற்றும் அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், இளைஞர்கள், பொதுமக்கள் என 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கண்டு களித்தனர்.

### நாகூர் நகரக் கழகச் செயலாளர் எம்.ஆர்.செந்தில்குமார் பெரிய தாயார்

# கே.கமலா மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

நாகை. பிப். 1–

நாகை மாவட்டம் நாகூர் நகரக் கழகச் செயலாளர் எம்.ஆர். செந்தில்குமார் பெரியம்மாவும், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் எம்.கந்தசாமி மனைவியும், முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே முத்துகிருஷ்ணன் தாயாருமான கே. கமலா அம்மாள் மறைவுக்கு கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

நாகை மாவட்டம் நாகூர் நகரக் கழகச் செயலாளர் எம்.ஆர். செந்தில்குமார் பெரியம்மாவும், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் எம்.கந்தசாமி மனைவியும், முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே முத்துகிருஷ்ணன் தாயாருமான கே. கமலா அம்மாள், இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். மறைந்த கமலா அம்மாளுக்கு மகன்கள் கே.செல்லம், கே.நாகராஜ், கே.முத்து கிருஷ்ணன், கே.கர்த்திகேயன் ஆகியோர் உள்ளனர். மறைந்த கமலா அம்மாள் உடலுக்கு நாகை மாவட்டக் கழக செயலாளர் என்.கௌதமன் உள்ளிட்ட கழகத்தினர் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர்.



திராவிட மாடல் அரசின் மக்கள் நலத்திட்டங்களின்படி மாணவ மாணவிகளின் கல்வி தரத்தை உயர்த்தும் நோக்கில் புள்ளமங்கலம் அரசு பள்ளியில் கலையரங்கம் மற்றும் கழிப்பறை கட்டிடங்களை பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. திறந்துவைத்து, மாணவிகளை குத்துவிளக்கேற்ற கேட்டுக்கொண்டார். உடன் ஒன்றிய செயலாளர் ஐ.வி.குமரேசன்,தலைமை செயற்குழு உறுப்பினர் செல்வம் மற்றும் ஆசிரியர்கள் உடனிருந்தனர்.